

# گناہوں کے گواہ

# பாவங்களை பறைச்சாற்றும் சாட்சிகள்


உர்துவில்

حضرت پیر ذوالفقار احمد صاحب نقشبندی

دامت برکاتھم

# گناہوں کے گواہ

# பாவங்களை

# பறைசாற்றும் சாட்சிகள்

## உருதுவில்

**ஹஸ்ரத் ஷைக் பீர் துல்ஃபிகார் அஹ்மத் ஸாஹிப்**

**நக்ஷபந்தி தாமத் பரகாதுஹு**

## மேற்பார்வை

**மௌலானா ஷகீல் அஹ்மத்**

**நக்ஷபந்தி தாமத் பரகாதுஹு**

(பேராசிரியர் அல் பாக்கியாத்துஸ் ஸாலிஹாத்)

செல் : 94444 53232

## தமிழில்

**மௌலானா முஹம்மது ஸல்மான் தாவூதி**

## மதிப்புரை

அல்லாஹ்வின் கிருபையால் சர்வதேச அளவில் மாபெரும் திருத்த பணி செய்து வரும் பெரியார்களில் ஹள்ரத் மௌலானா பீர் துல்ஃபிகார் அஹ்மத் ஸாஹிப் நக்ஷபந்தி முஜத்திதீ தாமத் பரகாத்துஹும் அவர்கள் குறிப்பிட்டு சொல்லப்பட வேண்டியவர்கள்.

பாவத்தின் காரணத்தால் துன்பத்தில் துவண்ட மனிதர்கள் ஹள்ரத் அவர்களின் சொற்பொழிவால் தனக்குள் திருத்தத்தை ஏற்படுத்தி, இன்பமான, தூய்மையான வாழ்க்கையை மேற்கொண்டவர்கள் ஏராளம். பொதுமக்கள் மட்டுமின்றி உலமாக்கள் மற்றும் ஸாலிஹீன்கள் என அனைத்து தரப்பினரும் ஹள்ரத் அவர்கள் மூலம் பயன் அடைந்து வருகின்றனர்.

தற்காலத்தில் நன்மைகள் செய்வதை விட பாத்தை விட்டும் தப்பிப்பது மிகவும் கடினமாக உள்ளது. தன்னை யார் பார்க்கிறார்கள் என்ற நினைப்பில் மனிதன் பல்வேறு விதமான பாவங்களை செய்துவிடுகிறான். அதுவும் இணையதளத்தின் பயன்பாடுகள் பெருகி விட்ட தற்காலத்தில் கூற வேண்டியதே இல்லை. இணையதளத்தின் மாயவலைக்குள் சிக்கி இறைவனை மறந்து யார் என்னை பார்க்கிறார்கள் என்ற நினைப்பில் பல்வேறு விதமான பாவங்களில் மனிதன் இன்பம் காண ஆரம்பித்து விட்டான்.

ஆனால், மனிதன் எங்கிருந்து என்ன பாவம் செய்தாலும் அதற்கு இறைவன் எவ்வாறு சாட்சிகளை உருவாக்குவான் என்பதை குர்ஆன், ஹதீஸ் ஒளியில் ஆற்றிய உறையின் தமிழாக்கமே அல்லாஹ் இந்நூலின் மூலமாக சமுதாயத்திற்கு பல்வேறு விதமான நன்மைகள் வழங்குவதோடு பாவங்களை விட்டும் தப்பிக்கும் எண்ணங்களை ஏற்படுத்துவனாக!

ஆமீன்...


- மௌலான ஷகீல் அஹ்மத் நக்ஷபந்தி

மத்ரஸா பாக்கியாத்துஸ்ஸாலிஹாத் துணை முதல்வர்

போன் - 9444453232

# அல்லாஹ்வின் அருட்கொடைகள் எண்ணிலடங்காதது

அல்லாஹ் மனிதனை தன் பேராற்றலால் படைத்தான். மேலும் அவனுக்கு எண்ணிலடங்காத அருட்கொடைகளையும் கொடுத்துள்ளான். இதை தனது திருமறையில்

وَإِن تَعُدُّوا۟ نِعْمَتَ ٱللَّهِ لَا تُحْصُوهَا

நீங்கள் அல்லாஹ்வின் அருட்கொடைகளை கணக்கிட ஆரம்பித்தால் அவைகளை கணக்கிட முடியாது.

அல்குர்ஆன் : 14:34

என்று கூறுகிறான். உலகில் மரத்திலுள்ள இலைகளையும், மணலின் துகள்களையும் எண்ணிலடக்கி விடலாம். ஆனால் அல்லாஹ்வின் அருட்கொடைகளை கணக்கிடுவதென்பது முடியாத காரியமாகும்.

ஆக அல்லாஹ் கொடுத்த அருட்கொடைகளை நாம் சிந்தனை செய்தால் பேராச்சரியம் அடைந்திடுவோம்.

அல்லாஹ் நமக்கு பார்வையை தரவில்லையென்றால் நாம் குருடராகியிருப்போம். கேட்கும் திறனை தரவில்லையென்றால் செவிடராகியிருப்போம். உடல் ஆரோக்கியத்தை தரவில்லை யென்றால் நோயாளிகளாகியிருப்போம். உணவளிக்கவில்லை யென்றால் பசித்தவர்களாகியிருப்போம். தண்ணீரை தரவில்லை யென்றால் தாகித்தவர்களாகியிருப்போம். அறிவைத் தரவில்லை யென்றால் மடையர்களாகியிருப்போம். செல்வத்தை தரவில்லை யென்றால் வறுமைக்குள்ளாகியிருப்போம். கண்ணியத்தை தரவில்லையென்றால் கேவலமடைந்திருப்போம்.

ஆக நம்மீது அல்லாஹ்வின் அருட்கொடைகள் உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை பரவியுள்ளது.

# அருட்கொடைகளின் மதிப்பு

இவ்வருட்கொடைகளின் மதிப்பை அதனை இழந்த பின்பே மனிதன் உணருகிறான். ஒருமுறை நான் மஸ்ஜிதுல் ஹராமில் இருந்தேன். அப்போது இரு கைகளும் புஜம் வரை இல்லாத ஒரு மனிதரைப் பார்த்தேன். அப்போது 'யா அல்லாஹ்! இவன் எப்படி ஆடை அணிவான்? எப்படி உண்பான்? எப்படி தன்னை சுத்தப்படுத்திக் கொள்வான்? மனைவி, மக்களோடு எப்படி சேர்ந்திருப்பான்? தூங்கும் போது போர்வை விலகிவிட்டால் அதை எப்படி தன் மீது போர்த்துவான்? மேலும் தாகம் ஏற்பட்டால் தண்ணீர் குவலையை எவ்வாறு பிடிப்பான்?' என்று நான் சிந்தித்துக் கொண்டிருக்கும் போது ஒரு அரபி மனிதர் அவரை சந்தித்து இந்நிலை உனக்கு எப்படி ஏற்பட்டது? என்று விசாரித்தார். அதற்கு அந்த ஊனமுள்ள மனிதர் பொருப்பாளனான அல்லாஹ்வே எனக்கு போதுமானவன் என்று கூறிய அவர்

قُل لَّن يُصِيبَنَآ إِلَّا مَا كَتَبَ ٱللَّهُ لَنَا

(நபியே!) நீர் கூறுவீராக! அல்லாஹ் எங்களுக்கு விதித்ததையன்றி வேறொன்றும் நிச்சயமாக எங்களுக்கு ஏற்படாது.

அல்குர்ஆன் : 9:51

என்று கூறிய பிறகு

قَالَ إِنَّمَآ أَشْكُوا۟ بَثِّى وَحُزْنِىٓ إِلَى ٱللَّهِ

என் சஞ்சலத்தையும், கவலையையும் நான் அல்லாஹ்விடமே முறையிடுகிறேன்.

அல்குர்ஆன் : 12:86

என்று திருக்குர்ஆன் மூலம் பதிலளித்தார்.

அம்மனிதர் இந்த ஆயத்துகளை ஓதியவுடன் கண்களில் கண்ணீர் வந்துவிட்டது. யா அல்லாஹ்! நான் கேட்காமல் எனக்கு கொடுத்த கையும், புஜமும் எவ்வாறு பெரும் அருட்கொடை என்ற

விஷயத்தை நாங்கள் சிந்தித்துக் கூட பார்க்கவில்லையே! ஒருவருக்கு உட்கார்ந்திருக்கும் நிலையில் வாதநோய் வந்து கால்களும், கைகளும், நாவும் செயலிழந்து போய்விடும் போதுதான் அவ்வுறுப்புகள் எவ்வளவு பெரிய அருட்கொடை என்பதை உணரப்படுகிறது. சில நாட்களுக்கு முன்பு ஒரு நிகழ்ச்சியில் ஒருவர் கவிதை படித்துக் கொண்டிருக்கும் போது வாத நோய் தாக்கி நாவு இருகிக் கொண்டது. அவரால் பேசவும் இயலாமலாகிவிட்டது. அதே போன்று நாம் விடும் சுவாசக்காற்று இலகுவான முறையில் உள்ளே சென்று வெளியே வருவது சாதாரண விஷயமா? நாங்கள் மூச்சு விட சிரமப்பட்டுக் கொண்டிருக்கும் ஒருமனிதரைப் பார்த்தோம். அவரின் மூச்சுக் காற்று உள்ளே செல்லவுமில்லை, வெளியே வரவுமில்லை. சிறிது நேரத்தில் அவரது உயிர் பிரிந்துவிடுமோ என்று நாங்கள் எண்ணுமளவு அவரது நிலை மோசமாகிவிட்டது. அப்போது தான் யா அல்லாஹ்! நீ கொடுத்த அருட்கொடையை எப்போது வேண்டுமானாலும் பறித்துக் கொள்ள முடியும். அவ்வாறிருந்தும் எங்களைப் போன்ற தகுதியற்றவர்களுக்கு அருட்கொடைகளை கொடுத்த அல்லாஹ் நீயே மிகப் பெரியவன் என்பது நினைவுக்கு வந்தது.

## முழு அரசாட்சியின் மதிப்பு

ஒருமுறை மன்னர் ஹாரூன் ரஷீத் (ரஹ்) அவர்களுக்கு தாகம் ஏற்பட்டது. உடனே குளிர்ந்த நீர் கொண்டுவரப்பட்டது. அங்கிருந்த இறைஞானி பஹ்லூல் (ரஹ்) அவர்கள் அரசரிடம் 'அரசரே! எங்களுக்கு கடுமையான தாகம் ஏற்பட்டு அதை தீர்க்க உலகில் ஒரு குவளைத் தண்ணீரைத் தவிர வேறு தண்ணீரே இல்லாவிட்டால் அந்த ஒரு குவளைத் தண்ணீரை என்ன விலை கொடுத்து வாங்குவீர்கள்? என்று கேட்டார். அதற்கு அரசர் என் ஆட்சியில் பாதியை கொடுத்து வாங்குவேன் என்றார். சரி! நீங்கள் தண்ணீரை வாங்கி குடித்த பின் தங்களுக்கு சிறுநீர் அடைப்பு ஏற்பட்டு அதை குணப்படுத்தும் மருந்து உலகில் ஒரே ஒரு மருத்துவரிடம் மட்டுமே இருந்தால் அதை எவ்வளவு விலை கொடுத்து வாங்குவீர்? என்

ஆட்சியில் மீதமுள்ள ஒரு பாதியை(யும்) கொடுத்து வாங்குவேன். இதைக் கேட்ட பஹ்லுல் (ரஹ்) அவர்கள் உங்கள் முழு ஆட்சியும் ஒரு குவளை தண்ணீருக்கும், குடித்த தண்ணீரை உடலிலிருந்து வெளியாக்குவதற்குமே போதுமாக இருக்கும் பட்சத்தில் உங்களது வாழ்வில் பல்லாயிரக்கணக்கான குவளை நீரை அருந்திருப்பீர்கள். இன்னும் அல்லாஹ்வின் பல்லாயிரக்கணக்கான அருட்கொடை களை உபயோகித்த நீங்கள் அவற்றுக்காக எவ்வளவு விலை கொடுக்க வேண்டியிருக்கும் (என்பதை யோசித்துக் கொள்ளுங் கள்) என்று அறிவுறுத்தினார்.

## இப்போது எவ்வாறு படுத்து உறங்க முடியும்?

எனது மருத்துவ நண்பர் ஒருவர் என்னை சந்திக்க வந்திருந்தார். நாங்கள் சாப்பிட்ட பின் சற்று படுத்து உறங்குங்கள் என்று கூறினேன். சுவற்றுடன் ஒரு தலையணையை சேர்த்து வையுங்கள். அதன் மீது சாய்ந்து உட்கார்ந்துக் கொள்கிறேன் என்று கூறினார். ஏன் என்று கேட்டேன். எனக்கு ஒரு வியாதி இருக்கிறது என்று கூறினார். நாம் சாப்பிடும் உணவு, உணவுக்குழாய் வழியாக வயிற்றுக்குள் சென்று விடுகிறது. அல்லாஹ் அதில் ஒரு அடைப்பை (Value) ஏற்படுத்தியுள்ளான். அது (Viper) நகரும் தன்மை கொண்டது. மேலிருந்து உணவு வந்தால் அந்த அடைப்பு திறந்துக் கொள்ளும். உணவு உள்ளே சென்றுவிடும். வெளியே வர முயற்சித்தாலும் வர முடியாது. எவராவது சாப்பிட்ட பின் தலைகீழாக நின்றாலும் உணவு வாய் வழியாக வெளியே வராது. (None Return Value) ஆனால் என்னுடைய அந்த (Value) அடைப்பு (Leak) கசிய ஆரம்பித்து விட்டது. நான் சிறிது நேரம் படுத்தாலும் எனது வயிற்றுக்குள்ளிருக்கும் உணவு வாய் வழியாக வெளியே வந்துவிடும். நான் பல வருடங்களாக உட்கார்ந்த நிலையிலேயே இரவை கழிக்கிறேன். படுத்து உறங்கும் சுகத்தை என் வாழ்க்கையில் இழந்து விட்டேன் என்று என் நண்பர் கூறினார். அப்போது தான் படுத்த நிலையில் உறங்குவது அல்லாஹ்வின்

எவ்வளவு பெரிய அருட்கொடை என்பதை உணர்ந்தேன்.

## அவமதிப்பின் விளைவு

பொதுவாக நாம் யாருக்காவது ஏதேனும் பொருளை கொடுத்தால் அதை அவர் விருப்பப்படி பயன்படுத்த வேண்டும் என்று நினைப்பது நம் இயல்பே. உதாரணமாக நாம் வீட்டை வாடகைக்கு கொடுத்தோம். வாடகைக்கு வாங்கியவர் வீட்டை சுத்தமாக வைக்காமல், வீட்டிலுள்ள செடி, கொடிகளை பராமரிக்காமல் விட்டு விட்டால் சில மாதங்களிலேயே வீட்டை காலி செய்ய சொல்லிவிடுவோம். வாடகைக்கு கொடுத்த வீட்டையே நாம் கவனிக்கிறோமென்றால் சில வருடங்களுக்காக அல்லாஹ்வால் கொடுக்கப்பட்ட சுமார் 6 அடி உயரமுள்ள உடலும் வாடகைக்குத் தான். இதில் நாம் எந்தளவு கவனம் கொள்ள வேண்டும்? வாகனத்தை ஓட்டுபவன் சரியாக ஓட்டாவிட்டால் அவனை வாகனத்தை விட்டு(ம்) இறக்கி கேள்வி கேட்கிறோம். அதே போன்று தான் அல்லாஹ் கொடுத்த இந்த உடலை சரியான முறையில் உபயோகிக்க வில்லையென்றால் அல்லாஹ்விடம் பதில் சொல்ல வேண்டியிருக்கும்.

உலக நியதி ஒன்று கூறுகிறேன். கவனமாக கேளுங்கள்! கோடீஸ்வரனான ஒரு மனிதர் தன் மகனிடம் 'மகனே! நான் உனக்கு 25 இலட்சம் மதிப்பில் ஒரு வியாபாரத்தை ஆரம்பித்து கொடுக்கிறேன். அதை நீ சரியான முறையில் நடத்திவிட்டால் என் முழு வியாபாரத்தையும் உன்னிடம் ஒப்படைத்துவிடுகிறேன். சரியாக நடத்தாவிட்டால் சிறிய வியாபாரத்தையே சரியாக நடத்தாத உன்னிடம் பெரிய வியாபாரத்தை ஒப்படைக்க முடியாது' என்பார்.

இவ்வுதாரணம் நமக்கு முற்றிலும் பொருந்தக் கூடியது. அல்லாஹுதஆலா உலகில் நமக்கு சில அருட்கொடைகளை கொடுத்து அவற்றை யார் சரியான முறையில் உபயோகிக்கின்றார் களோ அவர்களுக்கு மறுமையில் அல்லாஹ்வை சந்திக்கும் போது அவற்றை அல்லாஹ் அதிகமாக்கி கொடுப்பான். யார் அவற்றை

சரியான முறையில் உபயோகிக் வில்லையோ அவரிடமிருந்து அல்லாஹ் அவற்றை நிரந்தரமாக பறித்துக் கொள்கிறான்.

## அருட்கொடைகளில் மோசடி

குழந்தை பிறக்கும் பொழுது அதனுடைய வாயில் பற்களும் இருப்பதில்லை. உடலில் சக்தியும் இருப்பதில்லை. யோசிக்கும் திறனும் இல்லை. மேலும் நினைவாற்றலும் இருப்பதில்லை. அல்லாஹுதஆலா கொஞ்சம் கொஞ்சமாக இந்த அனைத்து அருட்கொடைகளையும் கொடுத்து அவன் 15 வயதை அடையும் போது இளமையின் சக்தியையும் கொடுத்து தான் அளித்த இந்த அருட்கொடைகளையெல்லாம் மனிதன் எம்முறையில் பயன்படுத்துகிறான் என்று சோதிக்கிறான். உதாரணத்திற்கு அல்லாஹ் கொடுத்த கண் குர்ஆன் ஷரீஃபை பார்ப்பதற்கும், அல்லாஹ்வின் வீட்டை தரிசிப்பதற்கும், இறை நேசர்களை சந்திப்பதற்குமாகும். இவையன்றி வேறு தவறான காரியங்களில் நாம் கண்ணை உபயோகித்தால் நாம் அமானிதத்தில் மோசடி செய்கிறோம் என்று பொருள்.

நாவை கொடுத்தது குர்ஆன் ஷரீஃபை ஓதுவதற்கும், தீனின் பக்கம் மக்களை அழைப்பதற்கும் நல்ல விஷயங்களை பேசுவதற்குமே. ஆனால் நாம் இந்த நாவை பெருமையடிப்பதற்கும், புறம் பேசுவதற்கும், கோள் சொல்வதற்கும், பொய் பேசுவதற்கும், இட்டுக்கட்டுவதற்கும் பயன்படுத்தினால் நாம் அல்லாஹ் கொடுத்த அருட்கொடைகளை சரியான முறையில் பயன் படுத்தாமல் அவற்றில் மோசடி செய்து கொண்டிருக்கிறோம். இவ்வாறுதான் அனைத்து அருட்கொடைகளும், நாம் அவற்றை சரியாக பயன் படுத்தாவிட்டால் அதில் மோசடி செய்கிறோம். யார் மோசடி செய்கிறார்களோ அவர்களிடமிருந்து அவை பறிக்கப்பட்டுவிடும்.

பொதுவாகவே அல்லாஹ் தான் கொடுத்த எல்லா அருட்கொடைகளையும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின் திரும்ப பெற்றுக் கொள்கிறான். மௌத் வந்தால் கண் பார்வை இழந்துவிடும். பேசுவதற்கான சக்தி இருக்காது. கை, கால்களும் சக்தியை

இழந்துவிடும். கையை அசைக்கவும் முடியாது. கையால் எப்பொருளையும் பிடிக்கவும் முடியாது. ஏனென்றால் இந்த அருட்கொடைகளையெல்லாம் அல்லாஹுதஆலா திரும்ப பெற்றுக் கொண்டான்.

## நாங்கள் குருடர்களாக இருக்க வில்லையே!

மறுமை நாளன்று மனிதனை எழுப்பப்பட்டு அல்லாஹுதஆலா தான் கொடுத்த அருட்கொடைகளை நீ எவ்வாறு செலவு செய்தாய்? என்று கேள்வி (கணக்கு) கேட்பான்.

யா அல்லாஹ்! நான் எனது பார்வையை சரியான முறையில் பயன்படுத்தினேன் என்று ஒருவன் கூறி அது அவனுடைய அமல்களின் ஏட்டின் பதிவிலும் நிரூபணமானால் அல்லாஹ் அவனுக்கு தன்னையும், தன் ரஸூல்மார்களை பார்க்குமளவுக்கு பார்வையை வழங்குவான். எம்மனிதன் உலகில் தன் பார்வையை சரியாக பயன்படுத்தவில்லையோ அவனை மறுமை நாளில் குருடனாக ஆக்கி, நரகில் தள்ளப்படுவான். இதை அல்லாஹ் தன் திருமறையில் கூறும்போது

وَمَنْ كَانَ فِي هَٰذِهِ أَعْمَىٰ فَهُوَ فِي الْآخِرَةِ أَعْمَىٰ وَأَضَلُّ سَبِيلًا

எவர் இவ்வுலகில் (உண்மையை அறியாத) குருடராக இருந்தாரோ அவர் மறுமையிலும் குருடராகவே இருப்பார். மேலும் அவர் நேரான பாதையை விட்டும் வழிதவறியவராவார்.

அல்குர்ஆன் : 17:72

என்கிறான்.

قَالَ رَبِّ لِمَ حَشَرْتَنِي أَعْمَىٰ وَقَدْ كُنْتُ بَصِيرًا ﴿١٢٥﴾

அப்போது அம்மனிதன் திட்டமாக நான் (உலகில்) பார்வையுடையவனாக இருக்க என்னை ஏன் குருடாக எழுப்பினாய்?

அல்குர்ஆன் : 20:12

என்று கேட்பான்.

قَالَ كَذَٰلِكَ أَتَتْكَ ءَايَٰتُنَا فَنَسِيتَهَا ۖ وَكَذَٰلِكَ ٱلْيَوْمَ تُنسَىٰ ﴿١٢٦﴾

அதற்கு அல்லாஹுதஆலா அவ்வாறு தான். நம்முடைய வசனங்கள் உம்மிடம் வந்தன. அவற்றை நீ மறந்து விட்டாய். அவ்வாறே இன்று நீ மறக்கடிக்கப்படுகிறாய்.

அல்குர்ஆன் : 20:126

என்று கூறுவான்.

அதாவது நான் கொடுத்த அருட்கொடைகளை தவறான முறையில் பயன்படுத்தினால் உங்களுக்கு இந்த அருட்கொடைகள் தகுதியானதல்ல என்று அல்லாஹ் கூறுவான்.

## நரகவாதியின் உணவும், பானமும்

அல்லாஹுதஆலா மனிதனுக்கு உலகில் உண்ண உணவைக் கொடுத்தான். அதை அவன் (ஹலால்) ஆகுமான வழியில் சம்பாதித்து ஆகுமாக்கப்பட்டதை சாப்பிட்டால் சுவனத்தில் அவனுக்கு அவன் விரும்பும் உணவை கொடுக்கப்படும்.

ஹதீஸில் கூறப்பட்டுள்ளதாவது:- ‘சுவனவாசி அல்லாஹ்வை சந்திக்கும் போது எழுபதாயிரம் வகையான உணவுகளை வைத்து விருந்தளிக்கப்படும்.

மேலும் உலகில் தடுக்கப்பட்டதை சாப்பிட்டு அல்லது வட்டியை சாப்பிட்டு அல்லது சந்தேகத்திற்குரியவைகளை சாப்பிட்டு நரகம் சென்ற மனிதனுக்கு கிடைக்கும் உணவு

وَلَا طَعَامٌ إِلَّا مِنْ غِسْلِينٍ ﴿٣٦﴾ لَّا يَأْكُلُهُۥٓ إِلَّا ٱلْخَٰطِـُٔونَ ﴿٣٧﴾

இன்னும் நரகவாசிகளின் உடலிலிருந்து வடியும் சீழை தவிர வேறு உணவு அவனுக்கு இல்லை. குற்றவாளிகளைத் தவிர வேறு யாரும் அதை உட்கொள்ளமாட்டார்கள்.

அல்குர்ஆன் : 69:36,37

என்று அல்லாஹ் கூறுகிறான்.

நரகவாதிகளின் காயங்களிலிருந்து வெளியாகும் இரத்தத்தையும், சீழையும் ஒன்று சேர்த்து அவர்களுக்கே குடிக்க கொடுக்கப்படும். காரணம் நீ உலகில் தடுக்கப்பட்ட பானத்தை குடித்துக் கொண்டிருந்தாய். மேலும் ஆகுமாக்கப்பட்ட அருட்கொடைகளை அவமதித்தாய். இன்று உன்னுடைய பானம் நரகவாதிகளின் பானம் தான் என்று கூறப்படும்.

## இறைவனின் சந்திப்பை விட்டும் தடுக்கப்பட்ட மக்கள்

உலகில் தன் முகத்தை பார்க்க அனுமதிக்கப்படாதவர்களிடம் காட்டிக் கொண்டிருந்தான். மாற்றார்களின் மனோ இச்சை இன்னும் தீய ஆசைகளை நிறைவேற்றுவதில் தன்னைத்தானே ஈடுபடுத்திக் கொண்டிருந்தான். மாற்றார்கள் தன்னை பார்க்க வேண்டுமென்பதற்காக தங்களின் முகங்களை அழகு படுத்திக் கொண்ட ஆண்களையும், பெண்களையும் பற்றி ஹதீஸ்களில் வந்துள்ளது.

அதாவது கியாமத் நாளன்று சில அடியார்களின் பக்கம் அல்லாஹ் தன் பார்வையை செலுத்தமாட்டான். குர்ஆனிலும் அல்லாஹ் இதை கூறுகிறான்.

وَلَا يَنظُرُ إِلَيْهِمْ يَوْمَ الْقِيَامَةِ

( ) அல்லாஹ் அவர்களின் பக்கம் பார்க்கமாட்டான்.

அல்குர்ஆன் : 3:77

எவர் உலகில் தன் முகத்தை அல்லாஹ்வின் பிரியத்திற்குரிய நபியவர்களின் வழியில் ஆக்கிக் கொண்டாரோ அவரைப்பற்றி அல்லாஹ் குர்ஆனில்

وُجُوهٌ يَوْمَئِذٍ مُّسْفِرَةٌ ﴿٣٨﴾ ضَاحِكَةٌ مُّسْتَبْشِرَةٌ ﴿٣٩﴾

அந்நாளில் சில முகங்கள் பிரகாசமுள்ளவையாகவும், சிரித்தவைகளாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கும்.

அல்குர்ஆன் : 80:38,39

என்று கூறுகிறான்.

அன்றைய நாளில் அவர்களின் முகங்கள் மலர்ந்து மின்னிக் கொண்டிருக்கும். மேலும் அவன் தன் வாழ்நாளில் செய்த நல்லமல்களின் காரணமாக அல்லாஹ் அவனது முகத்தை மேலும் அழகுப் படுத்துவான்.

அதேபோல் யார் உலகில் தன் வாழ்க்கையை பாவத்தில் கழித்து விட்டாரோ அவரைப் பற்றி அல்லாஹ் குர்ஆனில்

تَلْفَحُ وُجُوهَهُمُ النَّارُ وَهُمْ فِيهَا كَالِحُونَ ﴿١٠٤﴾

அவர்களுடைய முகங்களை (நரக நெருப்பு பொசுக்கும். (உதடுகளெல்லாம் வெந்து, சுருண்டு) அங்கு அவர்கள் முகம் விகாரமானவர்களாக இருப்பார்கள்.

அல்குர்ஆன் : 23:104

என்று

فَأَمَّا الَّذِينَ اسْوَدَّتْ وُجُوهُهُمْ

இன்னும் சில முகங்கள் (கவலையால்) கடுமையாகவும் இருக்கும்.

அல்குர்ஆன் : 3:106

என்றும் கூறுகிறான்.

இன்று உலகில் நம் முகத்தில் இலேசாக மண் விழுந்துவிட்டால் உடனே முகத்தை கழுவி சுத்தம் செய்து விடுகிறோம். மறுமை நாளில் முகம் கருமையடைந்து விடுமே! அப்பொழுது நாம் என்ன செய்ய முடியும்?

# தீமைக்கேற்ப தண்டனை

அல்லாஹுதஆலாவின் நியதி என்னவெனில் மனிதனுடைய பாவமான செயல்களுக்கேற்றவாறு அவனுடைய தண்டனைகளும் அமையும். உதாரணமாக ஒரு மனிதன் விபச்சாரம் செய்து அதற்காக அல்லாஹ்விடம் (தவ்பா) மன்னிப்பு தேடாமல் இறந்துவிட்டால் அவனைப்பற்றி ஹதீஸில் வந்துள்ளது.

“நரகில் ஒரு குகை உள்ளது. அதில் தேள்கள் நிறைந்திருக்கும். விபச்சாரம் செய்தவனை அந்த குகைக்குள் தள்ளி அதன் வாயிலை அடைக்கப்படும். மேலும் அங்கிருக்கும் தேள்கள், தேனி அதன் ராட்டையை ஒட்டிக் கொண்டிருப்பதைப் போன்று இந்த மனிதன் மீது ஒட்டிக் கொள்ளும். மேலும் எல்லா தேள்களும் சேர்ந்து ஒரே நேரத்தில் அவனை கொத்தும். இப்படிப்பட்ட தண்டனை ஏன்? உலகில் நீ செய்த பாவத்தால் உன்னுடைய ஒவ்வொரு (Tisue) உறுப்பும் பாவத்தின் இன்பத்தை உணர்ந்தது. அதே போன்று இன்று உன்னுடைய ஒவ்வொரு உறுப்பும் தேளின் விஷத்தை சுகிக்க வேண்டும்” என்று கூறுவான்.

ஹதீஸில், “உலகில் பார்க்க அனுமதிக்கப்படாதவர்களின் பால் பார்வையை செலுத்தினால் நரகில் இரும்பினாலான ஊசியை நரக நெருப்பில் பழுக்க காய்ச்சி அவனது கண்களில் குத்தப்படும்” என்று வந்துள்ளது.

அல்லாஹுதஆலா நமக்கு கொடுத்த அருட்கொடைகளை நாம் சரியான முறையில் பயன்படுத்தினால் மறுமை நாளில் மீண்டும் சிறந்த அருட்கொடைகளுக்கு உரிமையானவர்களாக அல்லாஹ் நம்மை ஆக்குவான். இதைப்பற்றி அல்லாஹ் குர்ஆனில்

وَلَكُمْ فِيهَا مَا تَشْتَهِىٓ أَنفُسُكُمْ وَلَكُمْ فِيهَا مَا تَدَّعُونَ ﴿٣١﴾

சுவனத்தில் உங்கள் மனம் விரும்பியதெல்லாம் உங்களுக்கு உண்டு. மேலும் அதில் நீங்கள் கேட்பதெல்லாம் கிடைக்கும்.

அல்குர்ஆன் : 41:31

என்று கூறுகிறான்.

மேலும் நீங்கள் உலகில் எனது பிரியத்தை பூர்த்தி செய்தீர்கள். இன்று நான் உங்கள் பிரியத்தை பூர்த்தி செய்வேன். என்று அல்லாஹ் கூறுவான்.

## பாவத்தின் உள்ரங்க வடிவம்

நமது செயல்களுக்கு உள்ரங்கமும், வெளிரங்கமும் உண்டு. வெளிரங்கத்தை பொருத்தே உள்ரங்கமும் அமையும். இதனடிப்படையில் ஹள்ரத் அஷ்ரஃப் அலி தானவி (ரஹ்) அவர்கள் இந்த தலைப்பின் கீழ் ஒரு விளக்கத்தை எழுதியுள்ளார்கள்.

அதில் எவ்வித காரணமுமில்லாமல் பிற மனிதனுக்கு கஷ்டத்தையோ, மன உளைச்சலையோ ஏற்படுத்துபவனின் உள்ரங்கத்தின் வடிவம் தேளைப்போன்றது. செல்வம், பொருளின் மீது பேராசையுள்ளவனின் உள்ரங்கத்தின் வடிவம் நாயைப் போன்றது. காரணம் நாயிடம் பேராசை அதிகமிருக்கும். செத்துப்போன மாட்டை ஒரு நாய் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது வேறொரு நாய் வந்தால் அந்த நாய் இதை அருகில் கூட நெருங்க விடாது என்பதை நாம் பார்த்திருப்போம். அதனால் முழு மாட்டையும் சாப்பிடவும் முடியாது. இருப்பினும் பேராசை. எனவே பேராசையுடைய வனின் உள்ரங்கம் நாயைப் போன்றது. வெட்கமில்லாமல் ஆபாசமான காரியங்களையும், விபச்சாரத்தையும் செய்பவனின் உள்ரங்கத்தின் வடிவம் பன்றியைப் போன்றது. உலகில் தந்திரமாக பொய் சொல்லி மற்றவர்களை முட்டாளாக்கி நிம்மதியடைபவனின் உள்ரங்கத்தின் வடிவம் குரங்கைப் போன்றது. காரணம் குரங்கு(ம்) தந்திரமானது. இன்று உலகில் இப்படிப்பட்ட மனிதனை (Smart) 'ஸ்மார்ட்' என்று சொல்லப்படுகிறது. கல்வி இருந்தும் அதன்படி செயல்படாதவனின் உள்ரங்கத்தின் வடிவம் கழுதையைப் போன்றது. ஏனெனில் கல்வியிருந்தும் அதன்படி நடக்காதவர்களைப் பற்றி அல்லாஹ் குர்ஆனில்

كَمَثَلِ الْحِمَارِ يَحْمِلُ أَسْفَارًا

ஏடுகளை சுமக்கும் கழுதையைப் போன்றவர்கள்.

அல்குர்ஆன் : 62:5

என்று கூறுகிறான்.

## மனிதர்கள் எங்கு வாழ்கிறார்கள்?

மனிதர்களுடைய உள்ரங்கத்தின் வடிவத்தை இறைநேசர்கள் அறிந்துக்கொள்வார்கள். உதாரணத்திற்கு ஹள்ரத் அஹ்மது அலி லாகூரி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்.

“நான் ஒருமுறை கடைவீதி வழியாக சென்றுக் கொண்டிருந்த போது என் முன்னால் அகப்பார்வையுள்ள ஒரு மனிதர் என்னை அறிந்து, எனக்கு ஸலாம் சொல்லி அஹ்மது அலியே! மனிதர்கள் எங்கு வாழ்கிறார்கள்? என்று கேட்க, நான் ஆச்சரியமடைந்தவனாக அங்குமிங்கும் பார்த்துவிட்டு ஹள்ரத் அவர்களே! இந்த கடைவீதி முழுக்க மனிதர்களால் நிரம்பித்தானே இருக்கிறது என்றேன். அப்பெரியார் ஆச்சரியமாக பார்த்து விட்டு இவர்களெல்லாம் மனிதர்களா? என்று கேட்டார். அவருடைய இச்சொல் எனக்குள் ஒரு பிரதிபலிப்பை ஏற்படுத்தியது. அப்போது எனக்கு அந்த கடைவீதி நாய், பூனை, பன்றிகளால் நிரம்பி இருந்தது தெரியவந்தது. ஒரு சிலர் மட்டுமே மனிதர்களாய் காட்சியளித்தனர். எனக்குள் ஏற்பட்ட இந்த பிரதிபலிப்பு நீங்குவதற்குள் அப்பெரியார் சென்று விட்டார்.

ஹள்ரத் அவர்கள் குர்ஆன் பாடம் நடத்திக் கொண்டிருக்கும் போது (இடையில்) “மக்களே! அனைவரின் இறைவன் ஒருவன் தான். ஆனால் அந்த இறைவனுக்குரியவர்கள் ஆயிரத்தில் அல்ல. இலட்சத்தில் யாராவது ஒருவர் (மட்டும்) கிடைக்கலாம்” என்று கூறுவார்கள்.

# இப்படியும் மனிதர்கள் வாழ்ந்தார்கள்

அல்லாஹுதஆலாவிற்கு முன் நாம் நம் பாவங்களுக்கு மன்னிப்பு வேண்டி அல்லாஹ்வுடைய ஒப்புக்கொள்ளப்பட்ட அடியாராக ஆகுவதற்கு இன்னும் அவகாசம் இருக்கிறது. நமக்கு அவகாசமிருப்பதால் நாம் சந்தோஷமடைய வேண்டும். இது(வு)ம் அல்லாஹ் கொடுத்த ஒரு அருட்கொடையே.

எனவே நாம் செய்த பாவங்களுக்காக இன்றே உண்மையான முறையில் தவ்பா செய்து இந்த அருட்கொடையின் பிரயோஜனத்தை அடைய வேண்டும்.

ஐந்து விரல்களும் சமமாக இல்லாததைப்போல் நாமும் எப்போதும் ஒரே நிலையில் இல்லாமல் அவ்வப்போது பாவங்களை செய்து கொண்டே தான் இருக்கிறோம். ஆனால் இவ்வுலகில் எத்தனையோ சிறந்த பெரியார்கள் தங்களின் வாழ்நாளை எப்படி கழித்துள்ளார்கள் என்பதைப் பற்றி முஜத்திதே அல்ஃபஸானி (ரஹ்) தன் கிதாபில் இப்படி எழுதியுள்ளார்கள். அதாவது இந்த சமுதாயத்தில் 20 வருடம் வரை பாவத்தைப் பற்றி எழுதும் மலக்குக்கு தன் செயலேட்டில் பாவங்களை எழுதுவதற்குண்டான சந்தர்ப்பமே கொடுக்காத எத்தனையோ சிறந்த நல்லடியார்கள் வாழ்ந்துள்ளார்கள்.

ஹஜ்ரத் அப்துல்லாஹிப்னு முபாரக் (ரஹ்) அவர்கள் ஒரு பெண்ணைப் பற்றி கூறும் போது அப்பெண் எந்த விஷயமாக இருந்தாலும் குர்ஆனுடைய வசனங்களையே ஓதி பதிலளிக்கிறாள். காரணம் அவளுடைய உள்ளத்தில் இறைவனின் அச்சம் இருந்தது. மறுமை நாளுடைய கேள்வி கணக்கின் பயம் அப்பெண்ணின் உள்ளத்தில் பதிந்து விட்டது என்று கூறினார்கள்.

"என் நாவிலிருந்து குர்ஆனுடைய வசனங்களைத் தவிர வேறொன்றும் வெளிவராமல் இருந்தால் நாளை மறுமை நாளில் இறைவனுடைய கேள்வி கணக்கிலிருந்து தப்பித்துக் கொள்ளலாமல்லவா!" என்று அப்பெண் கூறிக் கொண்டிருந்தாள்.

நாம் அவர்களின் வாழ்க்கையையும் பார்க்கவேண்டும். நம்முடைய வாழ்க்கையையும் பார்க்கவேண்டும். நாம் நம் புலம்பலினாலும் கூட அடுத்தவர்களின் உள்ளத்தை காயப்படுத்தி விடுகிறோம்.

## ஆப்பிள் சாப்பிட்டதால் அல்லாஹ்வின் பயம்

ஒரு பெரியாரின் சம்பவம் எழுதப்பட்டுள்ளது. அவர் ஒருமுறை ஆற்றங்கரை ஓரமாக சென்று கொண்டிருந்தார். மிகவும் பசித்த நிலையில் இருந்தார். வறுமையின் காரணமாக செலவிடுவதற்கு அவரிடம் ஒன்றுமில்லை. அப்போது ஒரு ஆப்பிள் ஆற்றில் மிதந்து வந்தது. பசி மனிதனின் அறிவை செயலிழக்கச் செய்து விடுவதால் அவரும் அதை சாப்பிட்டு விட்டார். பின்புதான் சிந்தித்தார். இப்பழத்திற்கு சொந்தக்காரன் நானல்ல. எனவே பழத்திற் குரியவரிடம் சென்று மன்னிப்பு கேட்டு அதற்குண்டான தொகையை செலுத்த வேண்டுமென முடிவு செய்தவராக தண்ணீர் வந்த திசையில் சென்றார். அங்கு ஒரு ஆப்பிள் தோட்டமிருந்தது. இதிலிருந்து தான் பழம் விழுந்திருக்கும் என்று விளங்கிக் கொண்டு எஜமானரிடம் சென்று "நான் உங்கள் தோட்டத்துப் பழத்தை சாப்பிட்டு விட்டேன். என்னை மன்னியுங்கள்! அல்லது அதற்குண் டான தொகை எவ்வளவாக இருந்தாலும் தோட்டத்தில் வேலை செய்து அதை நிறைவேற்றி விடுகிறேன்" என்றார். உடனே எஜமானர் "எனக்கு வாய் பேச முடியாத, கண் இரண்டுமே தெரியாத, இரு காதும் கேளாத, கால் இரண்டும் ஊனமுள்ள ஒரு மகள் இருக்கிறாள். அவளை நீர் திருமணம் செய்து, வாழ்நாள் முழுவதும் அவளுக்கு பணிவிடை செய்து அவளை சந்தோஷமாக வைத்திருப்பதுதான் அப்பழத்திற்குரிய தொகையாகும்" என்றார்.

இதைக் கேட்டதும் கவலையடைந்தவராக தன் உள்ளத்தை நோக்கி நீ உலகில் இக்கஷ்டத்தை பொருந்திக் கொள்வது சுலபம். நாளை மறுமையில் அல்லாஹ்வுக்கு முன் குற்றவாளியாக

நிற்பதைவிட இதுவே மேல் என்று முடிவு செய்தவராக திருமணத்திற்கு தயாரானார். திருமணமும் முடிந்தது. இவர் தன் மனைவியை சந்திப்பதற்காக சென்ற பொழுது அதிர்ச்சியடைந்து விட்டார். அங்கு சந்திரனைப் போன்று அழகான கண்ணுடைய, வாய் பேசக்கூடிய, காது கேட்கக் கூடிய பெண் இருந்தாள்.

அதிர்ச்சியடைந்தவராக அப்பெண்ணிடம் உன் தந்தைக்கு நீ ஒரே பிள்ளையா? அல்லது உனக்கு சகோதரி யாரேனும் உண்டா? என்று கேட்க நான் ஒரே மகள் தான் என்று கூறினார்கள். இரவு அவ்வாறே கழிந்து விட்டது. மறுநாள் மாமனார் மருமகனை சந்தித்து விருந்தாளி எப்படி இருந்தாள் என்று கேட்க, தாங்கள் சொன்னதைப் போன்று எக்குறையும் அவளிடம் இல்லை. நீங்கள் சொன்ன எல்லா குறைகளை விட்டும் சுத்தமாக இருக்கின்றாள் என்று அவர் கூறினார். ஆம்! என் மகள் வெளிரங்கத்தில் அழகானவளைப் போல் உள்ரங்கத்திலும் அழகானவள். குர்ஆன் ஷரீஃபை மனனம் செய்த ஹாஃபிளாவாகவும், ஹதீஸைப் பற்றி அறிந்தவளாகவும் இருக்கிறாள்.

நான் அவளுக்காக அல்லாஹ்வுடைய பயமுள்ள ஒரு கணவனை தேடினேன். காரணம் யாருடைய உள்ளத்தில் அல்லாஹ் வுடைய பயமில்லையோ அவன் மனைவிற்குரிய கடமைகளை சரியான முறையில் நிறைவேற்ற மாட்டான். (எனவே தான் அல்லாஹுதஆலா 'சூரத்துன்னிஸா'வில் (அடிக்கடி) அல்லாஹ்வை அஞ்சிக்கொள்ளுங்கள் என்று வருகிறது. காரணம் அல்லாஹ்வுடைய பயம் உள்ளத்தில் ஏற்படாதவரை அவன் மற்றவர்களின் கடமைகளை சரியாக நிறைவேற்ற முடியாது என்பதை அல்லாஹ் அறிந்திருக்கிறான்). எனவேதான் இதுபோன்ற அடியானை எதிர்பார்த்திருந்தேன்.

ஒரே ஒரு ஆப்பிளை சாப்பிட்டதற்காக நீங்கள் மன்னிப்பு கேட்டவுடனேயே உங்கள் உள்ளத்தில் இறைபயம் இருப்பதை உணர்ந்துக் கொண்டேன். எனவே உங்களையே என் மகளுக்கு கணவனாக தேர்ந்தெடுத்துக் கொண்டேன் என்றார்.

இருவருமே சேர்ந்து வாழ்ந்தார்கள். அல்லாஹ் அவர்களுக்கு ஒரு மகனை கொடுத்தான். அதற்கு அவர்கள் நுஃமான் என்று பெயர் வைத்தார்கள். இந்த நுஃமான் தான் பெரியவராக இமாம் அபூஹனீஃபா (ரஹ்) ஆனார்கள்.

## இரண்டு பாதைகள்

இன்று நமக்கு இரண்டு பாதைகள் உள்ளது. ஒன்று நமது ஆசைகளையும், மனோ இச்சைகளையும் பூர்த்தி செய்துக் கொள்வது. இதன்படி வாழ்ந்துவிட்டால் அதன் விளைவு பின்னால் நமது யோசனை, சிந்தனையை விட அதி பயங்கரமா(ன தண்டனையா)க அமைந்து விடும். சில நிமிடம் செய்த குற்றத்திற்காக பல வருடங்கள் நரகில் எரிக்கப்படுவோம். (மோசமான முடிவை ஏற்படுத்தி தரும்) இந்த அறிவாற்றலை என்னவென்று சொல்வது?

இரண்டாவது பாதை, மனிதன் தன்னுடைய குறுகிய இவ்வாழ்க்கையில் நேர்மை, பயபக்தியோடு இருந்து மேலும் ஆகுமாக்கப்பட்டதை உபயோகித்துக் கொண்டால் அல்லாஹ்வால் ஒப்புக் கொள்ளப்பட்ட அடியார்களாக அவனிடம் செல்வோம்.

ஒரு சிறிய உதாரணத்தைப் பார்க்கலாம். ஒரு குழந்தையிடம் உனக்கு ஒரு சாக்லெட் தருகிறேன். அதற்கு பகரமாக இரண்டு அடியும் கொடுப்பேனென்றால் இந்த (Deal) ஒப்பந்தத்திற்கு அந்த குழந்தையும் தயாராகாது. எனக்கு சாக்லெட் தேவையில்லை என்று கூறிவிடும். உலகத்தின் சில இன்பம், சுவைக்காக நரகத்தின் மிகப்பெரும் தண்டனைக்கு தன்னைத்தானே தயாராக்கிக் கொள்வது ஆச்சரியமளிக்கின்றது. நாமென்ன குழந்தையை விட அறிவில் குறைந்து விட்டோமா?

நமது ஸஹாபாக்கள், பெரியார்களின் உள்ளத்தில் மறுமையின் காட்சி பதிந்து விட்டிருந்தது. நான் இதை செய்தால் இந்த தண்டனை என்பதை விளங்கி இருந்தார்கள். எனவே அவர்கள் பாவங்களை விட்டும் தங்களை பாதுகாத்துக் கொண்டார்கள். அல்லாஹ்விடம்

இப்படிப்பட்ட அடியார்கள் பெரிதும் மதிப்பிற்குரியவர்களாக இருக்கிறார்கள்.

## இறை பயத்தால் மேகத்தில் நிழல்

ஒரு வாலிபனுக்கு ஒரு பெண் மீது பிரியம் ஏற்பட்டு விட்டது. சந்தர்ப்பம் கிடைத்தால் தன் நிலையை அவளிடம் கூறி அவளை அடைய வேண்டுமென்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். ஒருநாள் அவள் வேலைக்குச் செல்லும் வழியில் அவளை சந்தித்து, வழி மறித்து 'நான் உன்மீது பிரியம் கொண்டுவிட்டேன். நீ இல்லாமல் என்னால் வாழ முடியாது. நான் உன்னோடு சேர்ந்திருக்க ஆசைப் படுகிறேன்' என்று சொல்ல, அவளோ 'நீ என்னை பிரியப்படுவதை விட அதிகமாகவே நான் உன்னை பிரியப்படுகிறேன். என்றாலும் நான் அல்லாஹ்வை பயப்படுகிறேன்' என்றாள். அபபெண்ணின் சொல்லிலிருந்து மனத்தூய்மை வாலிபனின் உள்ளத்தின் உலகையே மாற்றிவிட்டது. உடனே இந்த ஹராமான பிரியத்தை விட்டு விட்டு மார்க்க கல்வியை கற்று நேர்மையான இறையச்சமுள்ள வாழ்க்கை வாழ வேண்டுமென்று யோசிக்கத் தொடங்கியவன் அறிஞர்கள் அதிகமிருக்கும் ஊர் நோக்கி நடக்க ஆரம்பித்தான். வழியில் ஒரு முதியவர் வரவே அவரிடம் பேசியபோது அவர் அருகிலிருக்கும் (வேறு) ஊருக்குச் செல்கிறார் என்பதை தெரிந்துக் கொண்டு இருவரும் ஒன்றாகவே பயணிக்கலாம் என்று முடிவு செய்துக் கொண்டனர். அது வெயிற்காலமாக இருந்ததால் வெயில் சற்று கடுமையாகவே இருந்தது. என்றாலும் அல்லாஹ்வுடைய வல்லமை மேகம் இவர்களுக்கு நிழலிட்டது.

அவ்வாலிபன் இந்த முதியவரின் பொருட்டால்தான் மேகம் நிழலிடுகிறது என்று நினைக்க, முதியவரும் என் பொருட்டால்தான் மேகம் வாலிபனுக்கு நிழலிடுகிறது என்று நினைத்தார். அல்லாஹ்வின் வல்லமை அப்போது பாதை இரண்டாகப் பிரிந்தது. வாலிபன் செல்லும் பாதையில் மேகம் வாலிபனுக்கு நிழலிட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்த முதியவர் ஆச்சரியத்தோடு 'உன்னுடைய எச்செயல் அல்லாஹ்வுக்கு பிரியமாகி இந்த

அருட்கொடையை உனக்கு கொடுத்திருக்கிறான். 'நானும் பாவ மன்னிப்புக் கேட்கும் எண்ணத்தோடு சென்றுக் கொண்டிருக் கிறேன். என்றாலும் என்னுடைய இறைவனின் இரக்கத் தன்மையை யும், மதிப்பையும் பாருங்கள்! அவன் என்னை மறுமையின் வெப்பத் தை விட்டும் காப்பாற்றியே தீருவான். (தவ்பா) பாவமன்னிப்பின் காரணமாக என்னை உலக வெப்பத்திலிருந்தும் காப்பாற்றுவதற் குண்டான ஏற்பாட்டை செய்து விட்டான்' என்று கூறினார்.

## மஹ்ஷர் மைதானத்தில் எட்டு சாட்சிகள்

மறுமையில் ஒவ்வொரு மனிதனுக்கும் அவனுடைய பாவத்திற்கெதிராக 8 சாட்சிகள் இருக்கும் என்பதை கவனத்தில் வையுங்கள்.

### முதல் சாட்சி :- இடம்

மனிதன் எந்த இடத்தில் பாவம் செய்தானோ அந்த இடம் நாளை மறுமை நாளில் அவனுக்கெதிராக சாட்சி சொல்லும்.

يَوْمَئِذٍ تُحَدِّثُ أَخْبَارَهَا ۝ بِأَنَّ رَبَّكَ أَوْحَىٰ لَهَا ۝

“அந்நாளில் அது தன் விஷயங்களை (எல்லாம்) அறிவிக்கும். ஏனென்றால் (இவ்வாறே) உன் இறைவன் வஹீ மூலம் அதற்கு கட்டளையிட்டான்.”

அல்குர்அன் : 99:4,5

என்று கூறும்.

மேலும் இதை இக்காலத்தில் இலகுவான முறையில் விளங்க முடியும். ஏனெனில் வீடியோ, கேமரா இன்று செல்போனிலும் இருக்கிறது. அதேபோல் அல்லாஹ்வின் கட்டளையின் மூலம் பூமியின் ஒவ்வொரு சிறு பகுதியும் கேமராவாக ஆகும். நாம் எங்கு பாவம் செய்தாலும் பூமி அதை படமெடுத்து பாதுகாத்து மறுமையில் சாட்சி சொல்லும். பூமியின் மீது வணக்கம் புரிந்தவர்களுக்கு அது மறுமை நாளில் அவர்களின் வணக்கத்தைப் பற்றி சாட்சி சொல்லும்.

அதேபோல் பாவம் செய்தவர்களுக்கு அது அவர்களின் பாவத்திற்கு சாட்சியாக ஆகிவிடும்.

## இரண்டாவது சாட்சி :- காலம்

وَشَاهِدٍ وَّمَشْهُودٍ ۝

“எந்நாளில் பாவம் செய்தானோ அந்நாளும் மறுமையில் சாட்சி சொல்லும். சாட்சிகள் மீதும், சாட்சி சொல்லப்படுவதின் மீதும் சத்தியமாக”

அல்குர்ஆன் : 85:3

என்று அல்லாஹ் தன் திருமறையிலும் கூறுகிறான். மேலும் ஹதீஸில் வருவதாவது, ஒவ்வொரு நாளும் மனிதனை அழைத்து ‘நான் இன்றைய புதிய நாளாக உள்ளேன். என்னுடைய இந்த தினம் நீ என்ன அமலை செய்கிறாயோ மறுமையில் நான் உனக்கு சாட்சியாகுவன்’ என்று கூறுகிறது. எனவே காலமும் நம்மைப்பற்றி சாட்சி சொல்லும்.

## மூன்றாவது சாட்சி :- நாவு

“அன்றைய நாளில் அவர்களின் நாவுகள் சாட்சி சொல்லும்.”

என்று அல்லாஹ் தன் திருமறையில் கூறுகிறான். நாம் இன்று மணிக்கணக்கில் வீண் அரட்டை அடிக்கின்றோம். சிரிப்பதற்காக ஆபாசமான கதைகளை கூறுகின்றோம். இன்னும் பொய் கதைகள் சொல்கின்றோம். ஆனால் மறுமையில் இவ்விஷயங்களைப் பற்றியெல்லாம் கேள்வி உண்டு என்பதை மறந்து விடுகின்றோம்.

இன்று நாம் யாரையாவது வெட்கமில்லாதவனே! கேவலமானவனே! ஈமானில்லாதவனே! என்று சொல்வது மிகவும் சுலபம். ஆனால் மறுமையில் அதை நிரூபித்து காட்ட வேண்டும். இது மிகவும் சிரமமானது. நீ எப்படி அவனை வெட்கமில்லாதவனே! என்றும் இவனை கேவலமானவனே! என்றும் சொன்னாய்? என்று அல்லாஹ் கேட்பான். அல்லாஹ் கேட்பதென்பது சாதாரண விஷயமா? அச்சமயம் நம் நிலை என்னவாகும்?

وَإِذْ قَالَ اللَّهُ يٰعِيسَى ابْنَ مَرْيَمَ ءَأَنْتَ قُلْتَ لِلنَّاسِ
اتَّخِذُونِي وَأُمِّيَ إِلٰهَيْنِ مِنْ دُونِ اللَّهِ ۖ قَالَ سُبْحٰنَكَ
مَا يَكُونُ لِي أَنْ أَقُولَ مَا لَيْسَ لِي بِحَقٍّ ۚ إِنْ كُنْتُ قُلْتُهُ
فَقَدْ عَلِمْتَهُ ۚ تَعْلَمُ مَا فِي نَفْسِي وَلَا أَعْلَمُ مَا فِي نَفْسِكَ ۚ
إِنَّكَ أَنْتَ عَلَّامُ الْغُيُوبِ ﴿١١٦﴾

ஹள்ரத் ஈஸா (அலை) அவர்களையும், அவர்களின் சமூகத்தாரையும் கொண்டு வரப்படும். அப்போது அல்லாஹுதஆலா அச்சமூகத்தாரிடம் 'என்னுடன் வேறொருவரை ஏன் இணை யாக்குனீர்கள்?' என்று கேட்க அவர்கள் ஈஸா (அலை) அவர்களின் பக்கம் சுட்டி காட்டி 'இவர்தான் அல்லாஹ்வுடன் தன்னையும் சேர்த்துக் கொள்ளும்படி கூறினார்' என்பார்கள். உடனே அல்லாஹுதஆலா ஈஸா (அலை) அவர்களிடம் (أأنت قلت) நீர் கூறினீர்களா?.

அல்குர்ஆன் : 5:116

என்று கேட்பான்.

ஹள்ரத் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்கள் 'அரசனான அல்லாஹ்வுடைய இக்கேள்வியால், பயத்தினால் வியர்வை வெளியாகுவதைப் போல் ஹள்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கு பயத்தினால் முடியுடைய வேர்களிலிருந்து இரத்தம் வடிய ஆரம்பித்து விடும்' என்கிறார்கள். இவ்விஷயம் 'அபூரவ்க்' என்பவர் வாயிலாக அறிவிக்கப்பட்டுள்ளது என்று 'தஃப்ஸீரே மள்ஹரீ'யில் எழுதப்பட்டுள்ளது.

பாகம் : 4, பக்கம் : 46

நபிமார்களும் கூட அந்நாளில் பயந்து விடுவார்களென்றால் அப்போது நம்மிடம் நீ ஏன் அவனை வெட்கமில்லாதவனே! கேவலமானவனே! ஈமான் இல்லாதவனே! என்று சொன்னாய் என்று

அல்லாஹ் கேட்பான். நாம் என்ன பதில் சொல்ல முடியும்?

## நான்காவது சாட்சி :- உறுப்புகள்

மனித உடலில் மீதமுள்ள உறுப்புகளும் சாட்சி சொல்லும்.

وَتُكَلِّمُنَآ أَيْدِيهِمْ وَتَشْهَدُ أَرْجُلُهُم بِمَا كَانُوا۟ يَكْسِبُونَ ﴿٦٥﴾

அவர்கள் சம்பாதித்துக் கொண்டிருந்ததைப் பற்றி அவர்களின் கைகள் நம்மிடம் பேசும். மேலும் அவர்களின் கால்களும் சாட்சி சொல்லும்.

அல்குர்ஆன் : 36:65

என்று அல்லாஹ் கூறுகிறான்.

கைகளும், தொடைகளும் அவன் செய்த பாவம் பற்றி சாட்சி சொல்லும். அவைகளுடைய சாட்சியை கேட்டு மனிதன் அதிர்ச்சியடைந்தவனாக لِمَ شَهِدتُّمْ عَلَيْنَا ۖ ஏன் எனக்கெதிராக சாட்சி சொன்னீர்கள்?

அல்குர்ஆன் : 41:21

என்று கேட்பான்.

قَالُوٓا۟ أَنطَقَنَا ٱللَّهُ ٱلَّذِىٓ أَنطَقَ كُلَّ شَىْءٍ

அதற்கு அவைகள் எல்லாப்பொருட்களையும் பேசும்படி செய்யும் அல்லாஹ்வே எங்களையும் பேசும்படி செய்தான்.

அல்குர்ஆன் : 41:21

என்று சொல்லும்.

وَمَا كُنتُمْ تَسْتَتِرُونَ أَن يَشْهَدَ عَلَيْكُمْ سَمْعُكُمْ وَلَآ
أَبْصَٰرُكُمْ وَلَا جُلُودُكُمْ

உங்கள் காதுகளும், உங்கள் கண்களும், உங்கள் தோல்களும் உங்களுக்கெதிராக சாட்சி சொல்லாமலிருக்கும் பொருட்டு உங்கள் பாவங்களை நீங்கள் மறைத்துக் கொள்பவர்களாக இருக்கவில்லை.

அல்குர்ஆன் : 41:22

என்றும் அல்லாஹ் கூறுகிறான்.

உறுப்புகளாலேயே பாவம் செய்கிறோம். அதே உறுப்புகள் நாளை மறுமையில் அதற்கு சாட்சியாகிவிடும். ஆக இந்த உறுப்புகள் அல்லாஹ்வுடைய மறைமுகமான 'போலிஸ்' ஆகும். அவனுடைய தர்பாரில் 'ரிப்போர்ட்'டை கொடுத்து இம்மனிதன் இப்பாவத்தை செய்தான் என்பதற்கு நாங்கள் சாட்சி என்று கூறும்.

## ஐந்தாவது சாட்சி :- 2 மலக்குகள்

وَإِنَّ عَلَيْكُمْ لَحَٰفِظِينَ ۝١٠ كِرَامًا كَٰتِبِينَ ۝١١

يَعْلَمُونَ مَا تَفْعَلُونَ ۝١٢

"நிச்சயமாக உங்கள் மீது பாதுகாவலர்கள் (நியமிக்கப்பட்டு) இருக்கின்றனர். (அவர்கள்) கண்ணியம் வாய்ந்த எழுத்தாளர்கள். நீங்கள் செய்வதை அறிந்து (எழுதி)க் கொள்வார்கள்."

அல்குர்ஆன் : 83:10,11,12

என்று அல்லாஹ் கூறுகிறான். எனவே நாம் செய்பவற்றை முறையாக அந்த வானவர்கள் செயலேட்டில் பதிவு செய்துக் கொண்டிருக்கிறார்கள்.

## ஆறாவது சாட்சி :- செயலேடு

மலக்குகள் இதை எழுதுவர். நாவு சாட்சி சொல்வதோடு செயலையும் காட்டப்படும்.

وَوُضِعَ الْكِتَٰبُ فَتَرَى الْمُجْرِمِينَ مُشْفِقِينَ

مِمَّا فِيهِ وَيَقُولُونَ يَٰوَيْلَتَنَا مَالِ هَٰذَا الْكِتَٰبِ

لَا يُغَادِرُ صَغِيرَةً وَّلَا كَبِيرَةً اِلَّآ اَحْصٰىهَا ۚ وَوَجَدُوْا مَا عَمِلُوْا حَاضِرًا ؕ وَلَا يَظْلِمُ رَبُّكَ اَحَدًا ﴿٤٩﴾

குற்றவாளியான மனிதனை கொண்டுவரப்பட்டு அவனுடைய செயலேட்டை காட்டப்படும் போது அவன் எங்களுடைய கேடே! இதென்ன புத்தகம்! (எங்களுடைய பாவங்கள்) சிறியதோ, பெரியதோ ஒன்றையும் விடாது. இதில் வரையப் பட்டிருக்கின்றதே! என்று அவர்கள் கூறுவார்கள்.

அவர்கள் செய்த யாவும் அதில் இருக்க காண்பார்கள். உமதிறைவன் எவனுக்கும் (அவனுடைய தண்டனையை கூட்டியோ, குறைத்தோ) அநியாயம் செய்யமாட்டான்.

அல்குர்ஆன் : 18:49

என்று அல்லாஹ் தன் திருமறையில் கூறுகிறான்.

அவன் நரகிற்கு செல்லும் போது மலக்குகள் அவனிடம் அச்ச மூட்டி எச்சரிக்கை செய்யும். இன்னும் விளக்கமளிக்கும் எவரும் உன்னிடம் வரவில்லையா? என்று கேட்க விளக்கமளிப்பவர்கள் வந்தார்கள்.

وَقَالُوْا لَوْ كُنَّا نَسْمَعُ اَوْ نَعْقِلُ مَا كُنَّا فِىْۤ اَصْحٰبِ السَّعِيْرِ ﴿١٠﴾

நாங்கள் கேட்டு, விளங்கியிருந்தால் நாங்கள் நரகவாதியாக ஆகியிருக்க மாட்டோமே! என்று கூறுவார்கள்.

அல்குர்ஆன் : 67:10

என்றும் குர்ஆனில் உள்ளது. ஆக நாளை மறுமையில் நமது செயலேட்டையும் காண்பிக்கப்படும்.

## ஏழாவது சாட்சி :- (சொல்வதற்கு நடுக்கமாய் இருக்கிறது)

## மனித, ஜின்களின் நபி

அல்லாஹ்வின் பிரியத்திற்குரிய நபி சாட்சியாக ஆவார்கள். ஏனெனில் ஹதீஸ்களில் இருப்பதாவது, அடியான் செய்யும் செயல்களை மலக்குமார்கள் நபியவர்களின் சமூகத்தில் காண்பிக்கிறார்கள். மேலும் நாளை மறுமையில் அல்லாஹுதஆலா நபியவர்களை சாட்சியாக ஆக்குவான் என்று கூறப்பட்டுள்ளது. அல்லாஹ் இதை தன் திருமறையில்

فَكَيْفَ إِذَا جِئْنَا مِن كُلِّ أُمَّةٍ بِشَهِيدٍ وَجِئْنَا بِكَ عَلَىٰ هَٰؤُلَاءِ شَهِيدًا ﴿٤١﴾

ஒவ்வொரு சமுதாயத்தவரிலிருந்தும் (அவர்களது) சாட்சியை நாம் கொண்டு வந்து, இவர்கள் யாவருக்கும் சாட்சியாக (நபியே) உம்மை கொண்டு வந்தால் (இவர்களின் நிலை) எப்படி இருக்கும்?.

அல்குர்அன் : 4:41

என்று கூறுகிறான்.

யாருடைய பரிந்துரையின் பேரில் நமக்கு மன்னிப்பு கிடைக்குமோ, அப்படிப்பட்ட இன்னும் நமக்கு பரிந்துரைக்க வேண்டிய நபியையே நம் பாவத்திற்கு சாட்சியாளராக ஆக்கினால் நமது நிலை என்னவாகும்?

## தாடி சிரைக்கும் நேரத்தில்

மிர்ஸா பைதல் என்ற பெயர் கொண்ட ஒரு கவிஞர் நல்லதொரு கவிதையை இயற்றிருந்தார். அது ஈரானுடைய ஒரு மனிதனுக்கு மிகவும் பிடித்துவிடவே அவரை சந்திப்பதற்காக சென்றார். அங்கு சென்ற போது அக்கவிஞன் அமர்ந்து தன் தாடியை சிரைத்துக் கொண்டிருந்தான். இதைப் பார்த்த ஈரான் மனிதர் பெருமூச்சு விட்டவராக நபியவர்களின் பிரியத்தில் ஒரு அதி அற்புத கவிதையை இயற்றிய இவரே தாடியை சிரைக்கிறாரே! என்று கூறினார். இதைக் கேட்ட மிர்ஸா பைதல் தாடியைத் தானே சிரைக்கிறேன். யாருடைய உள்ளத்தையும் சிரைக்கவில்லையே!

என்றார். அதற்கு ஈரானிய மனிதர் நீ நபியவர்களின் உள்ளத்தை காயப்படுத்தி அவர்களுக்கு நோவினை கொடுக்கிறாய் என்றார்.

ஹதீஸில் வருவதாவது:

ஒருமுறை நபியவர்களுக்கு முன்னால் தாடி வைக்காத ஒருமனிதர் வந்தார். உடனே நபியவர்கள் தன் முகத்தை திருப்பிக் கொண்டார்கள்.

## பிரியத்திற்குரியவருக்கு முன்னால் ,கேவலப்படுத்தி விடாதே!

மனிதன் செய்யும் தீய செயல்கள் நபியவர்களுக்கு முன்னால் காட்டப்படும் போது, அல்லாஹ்வின் பிரியத்திற்குரிய நபியவர்கள் என் சமுதாய மக்கள் என் இரவின் அழுகைக்கு மதிப்பளிக்க வில்லையே! என்று எந்தளவு மனவேதனை அடைவார்கள்?

எனவே தான் இறைநேசர்கள் மன்னிப்பு கேட்கும்போது யா அல்லாஹ்! நாளை மறுமையில் நபியவர்களுக்கு முன்னால் கேள்வி கணக்கு கேட்டுவிடாதே! என்று கேட்பார்கள். அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்களின் சரித்திரத்தில் எழுதப்பட்டுள்ளதாவது:

அவர்கள் துஆ கேட்கும் பொழுது யா அல்லாஹ்! என் தவறுகளையும், பாவங்களையும் மன்னித்துவிடு! மன்னித்துவிடு! என்பார்கள். இன்னும் இறுதியில் யா அல்லாஹ்! எனக்கு மன்னிப்பு கிடையாது என்று முடிவு செய்யப்பட்டிருந்தால் நாளை மறுமையில் என்னை குருடனாக்கிவிடு! ஏனெனில் உன் பிரியத்திற்குரிய நபிக்கு முன்னால் நான் வெட்கி தலை குனிந்து விடக்கூடாது என துஆ செய்வார்கள்.

அல்லாமா இக்பால் (ரஹ்) அவர்கள் ஃபார்ஸி மொழியில் பாடிய ஒரு அழகான கவியின் விளக்கம்.

யா அல்லாஹ்! நீ யாருடைய தேவையுமற்றவன். நான் தேவையுள்ளவன். மறுமை நாளில் என்னுடைய தங்கடத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். கேள்வி கேட்க வேண்டுமென்ற முடிவில்

இருந்தால் நபியவர்களின் பார்வையிலிருந்து என்னை மறைத்து விட்டு என்னிடம் கேள்வி கேட்பாயாக! காரணம் நபியவர்களுக்கு முன் தலைகுனிவு ஏற்படக் கூடாது.

## எட்டாவது சாட்சி :-

அனைத்தையும் விட உயர்ந்த அல்லாஹ்
அல்லாஹு தஆலா குர்ஆனில்:

وَلَا تَعْمَلُونَ مِنْ عَمَلٍ إِلَّا كُنَّا عَلَيْكُمْ شُهُودًا

நீங்கள் எச்செயலை செய்த போதிலும் உங்கள் மீது நாம் நோட்டமிடாமல் இருந்ததில்லை.

அல்குர்ஆன் : 10:61

என்று கூறுகிறான்.

நாம் பாவமன்னிப்பு கேட்ட இறைவனே 'நான் சாட்சியாக ஆகுவேன்' என்று கூறுகிறான். அந்நாளில் நமது நிலை என்னவாகும்? எனவே இன்றே இந்த இடத்திலேயே உண்மையான மனதோடு செய்துவிட்ட பாவங்களுக்காக (தவ்பா) மன்னிப்பு கோர வேண்டும். இனிமேல் நன்மையான செயல்களை செய்வேன் என்று உறுதியாக முடிவு செய்ய வேண்டும். இன்னும் அவகாசமிருக்கிறது. அதை பயன்படுத்தி பிரயோஜனத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இன்று அல்லாஹ்வுடைய கிருபை பார்வை பட்டுவிட்டால் அனைத்து பாவங்களையும் அல்லாஹ் நன்மையாக மாற்றிவிடுவான்.

# அருள் எனும் கடலில் மூழ்குவோம்

அசுத்தம் நிறைந்த ஒருமனிதன் கடலுக்கருகில் நின்றுக் கொண்டு கடலை பார்த்துக் கொண்டிருந்தான். கடல் அவனிடம் "அடியானே! வெகு நேரமாக கரையோரத்திலேயே நின்றுக்

கொண்டிருக்கிறாயே! என்னுள் வரமாட்டாயா?" என்று கேட்டது.

அதற்கவன் "அசுத்தம் என்மீது அதிகம் ஒட்டியுள்ளது. அசுத்தம் நிறைந்தவனாக இருக்கிறேன். நான் உன்னுள் குதித்தால் நீயும் அசுத்தமாகிவிடுவாய்!" என்று கூறினான்.

கடல் சிரித்த வண்ணமாக "நான் ஆழம் நிறைந்தவன். உன்னைப் போல் ஆயிரம் பேர் வந்து என்னுள் குதித்தாலும் நான் அனைவரையும் சுத்தமாக்குவேன். நானும் சுத்தமாக இருப்பேன். நான் கடலாவேன்" என்று கூறியது.

ஆக கடலுடைய தன்மை இதுவெனில், அல்லாஹ்வுடைய (பாவ) மன்னிப்பின் கடல் எவ்வாறிருக்கும்? இன்னும் அவகாசமிருக்கிறது. நாம் அருளுடைய கடலோரத்தில் இருக்கிறோம். உண்மையாக மன்னிப்புக் கோரும் எண்ணத்தில் அருள் கடலில் மூழ்க வேண்டும். மேலும் அல்லாஹ்விடம் இறைஞ்ச வேண்டும். என் இறைவா! இனி பாவங்களை விட்டும் என்னை பாதுகாத்தருள்வாயாக! யா அல்லாஹ்! நீ உனது திருமறையில் ஷைத்தானை நோக்கி

إِنَّ عِبَادِى لَيْسَ لَكَ عَلَيْهِمْ سُلْطَٰنٌ

நிச்சயமாக என் (நல்) அடியார்கள் - அவர்களின் மீது உனக்கு எவ்வித அதிகாரமும் இல்லை.

அல்குர்ஆன் : 17:65

என்று கூறுகிறாய்.

யா அல்லாஹ்! நாங்கள் பலஹீனமானவர்கள். நீயே எங்களை பாதுகாத்தருள்வாயாக!

ராபியா பஸரிய்யா (ரஹ்) அல்லாஹ்வின் நல்லடியாராவார். இவர்கள் தஹஜ்ஜுத்துடைய (அதிகாலை) நேரத்தில் யா அல்லாஹ்! நீ வானத்தை பூமியின் மீது விழுவதை விட்டும் தடுத்துள்ளதைப் போன்று ஷைத்தான் என்மீது ஆதிக்கம் செலுத்துவதை விட்டும் தடுத்து விடுவாயாக! என்று துஆ செய்வார்கள்.

நாம் அல்லாஹ்விடம் மன்னிப்புக் கேட்க வேண்டும். மேலும் யா

அல்லாஹ்! உன் கிருபையால் நான் கலிமாவை கூறிவிட்டேன். அக்கலிமாவை பாதுகாக்கும் தகுதி எங்களுக்கு இல்லை. (தைரியமாக) செயல்களை காட்டுவதற்காக தகுதியுமில்லை. இப்படியிருந்தும் நாங்கள் வாழ்கிறோமென்றால் அது "நீ மறைக்கக்கூடியவன்" என்ற உன் தன்மையில் பொருட்டால்தான்.

யா அல்லாஹ்! நீ மறைக்கவில்லையென்றால் எங்களுடைய முகத்தை காண்பிப்பதற்கு கூட தகுதியற்றவர்களாகிவிடுவோம். ஏன்! வாழ்வதற்கும் கூட தகுதியற்றவர்களாகி விடுவோம்.

எங்கள் இரட்சகா! நீ உலகில் எங்கள் பாவங்களை மறைத்திருப்பதைப் போன்று மறுமையிலும் மறைப்பாயாக! அங்கும் எங்களுக்கு கிருபை செய்வாயாக!

## உடைந்த உள்ளத்தின் அழுகையும் கண்ணீரும்

(ஹள்ரத் அவர்களின் துஆ)

யா அல்லாஹ்! எங்கள் மீது கிருபை செய்து இன்று இவ்விடத்தில் எங்களது அனைத்து பாவங்களையும் மன்னித்து, எங்களை உன்னால் ஒப்புக் கொள்ளப்பட்ட நல்லடியார்களில் சேர்த்துவிடுவாயாக!

யா அல்லாஹ்! நீ ஹள்ரத் மூஸா (அலை), ஹாரூண் (அலை) அவர்களை "நான் உங்களுடைய இறைவன்" என பெருமையடித்துக் கொண்டிருந்த ஃபிர்அவ்னிடம் அனுப்பி "நீங்கள் அவனிடம் மென்மையாக பேசுங்கள்" என்று கூறினாய். யா அல்லாஹ்! அப்படிப்பட்ட மனிதனிடமும் மென்மையை கடைபிடிக்கச் சொன்னாய். ஆனால் நாங்களோ தினமும் ஸஜ்தாவில் தலை வைத்து "உயர்ந்தவனான எனது அல்லாஹ் பரிசுத்தமானவன்" என்று சொல்லும் அடியார்களாவோம்.

யா அல்லாஹ்! உன் அடியார்களை நீ கேவலப்படுத்தி விடாதே! அவர்களை பிடித்தும் விடாதே!

எங்கள் இறைவா! அனுதினமும் உன்னை ஒருமைப் படுத்திக் கொண்டிருக்கிறோம். எங்கள் மீது நீ இறக்கப்படுவாயாக!

சங்கையான இறைவனே! கோயிலுக்கு சென்று பினபு நரகம் செல்லும் அடியானைப்பற்றி எவ்வித கைசேதமும் இல்லை. உன் வீட்டிற்கு வந்து தவ்பா செய்யும் வாய்ப்பில்லாமல் பள்ளிவாசலை விட்டு வெளியேறி நரகில் போடப்படும் மனிதனைப் பற்றியே கைசேதப்படுகிறோம்.

யா அல்லாஹ்! உன் வீட்டிலிருந்து வெளியேறி நரகிற்கு செல்ல நாங்கள் பிரியப்படவில்லை.

ஒரு குருட்டு மனிதன் யாசகம் கேட்டுக் கொண்டிருந்தான். அப்போது ஒரு வீட்டுக்கு முன் யாசகம் கேட்ட போது அங்கிருந்து எந்த பதிலும் வரவில்லை. உடனே அக்குருட்டு மனிதன் “இது எந்த கஞ்சனுடைய வீடு? எந்த பதிலும் வரவில்லையே!” என்றான். அல்லாஹ்வின் அடியானே! இது அல்லாஹ்வின் வீடு, பள்ளிவாசலாகும்” என எவரோ ஒருவர் கூறினார். இதைக் கேட்ட அந்த யாசன் யாசகம் கேட்டுக் கொண்டிருந்த பாத்திரத்தை பூமியில் அடித்து உடைத்து விட்டு “நான் அல்லாஹ்வுடைய சந்நிதானத்தில் வந்து விட்டேன். இனி அவனன்றி வேறு யாரிடமும் யாசிக்க மாட்டேன்” என்று கூறினான்.

எங்கள் இரட்சகா! உன் சந்நிதானத்திற்கும் வந்து அமர்ந்திருக்கிறோம். வேறு யாருடைய சந்நிதானத்திற்கும் செல்ல எண்ணவும் மாட்டோம். எங்கள் மீது இரக்கப்பட்டு எங்களுடைய முந்தைய பாவங்களனைத்தையும் மன்னித்து எங்களை உன்னால் ஒப்புக் கொள்ளப்பட்ட நல்லடியார்களில் சேர்த்து விடுவாயாக! ஆமீன்... ஆமீன்... யாரப்பல் ஆலமீன்.